செ.வெ.எண்.36 நாள்: 27.12.2019

# தூத்துக்குடி மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் திருவைகுண்டம், திருச்செந்தூர், ஆறுமுகநேரி, தூத்துக்குடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பல்வேறு வாக்குசாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

---

தூத்துக்குடி மாவட்டத்தில் முதல்கட்டமாக ஊரக உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் திருவைகுண்டம், திருச்செந்தூர், ஆறுமுகநேரி, தூத்துக்குடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பல்வேறு வாக்குசாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று இன்று (27.12.2019) ஆய்வு செய்தார். திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த பழையகாயல் பகுதியில் உள்ள புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி, புனித மரியன்னை நடுநிலைப்பள்ளி, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி முக்காணி, புனித அந்தோணியார் ஆர்.சி.நடுநிலைப்பள்ளி, திருச்செந்தூர் ஒன்றியத்தில் உமரிக்காடு அரசு மேல்நிலைப்பள்ளி, சென் தாமஸ் மேல்நிலைப்பள்ளி, வீரபாண்டியன்பட்டிணம், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி நல்லூர், தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் புதுக்கோட்டையில் உள்ள P.S. பெரியநாயகம் மேல்நிலைப்பள்ளி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் உள்ள வாக்குசாவடிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார். ஆய்வின்போது கூட்டம் அதிகமாக இருந்த வாக்குசாவடிகளில் வாக்குபதிவு செய்யும் இடம் கூடுதலாக ஒன்று வைத்து விரைவுபடுத்துமாறு வாக்குசாவடி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், வாக்குசாவடிகளில் வாக்காளர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் உள்ளதா என்பதையும் ஆய்வு செய்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் மாநில தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி 2 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. நமது மாவட்டத்தில் உள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களில் முதல்கட்டமாக இன்று (27.12.2019) 7 ஊராட்சி ஒன்றியங்களில் காலை 7 மணிமுதல் வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. 11 மணி நேர நிலவரப்படி 25.1 சதவீதம் வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது. 7 ஊராட்சி ஒன்றியங்களிலும் சராசரியாக 25-28 சதவீதம் வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது. இதுவரை வாக்குப்பதிவு மையங்களில் எந்தவொரு சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படவில்லை. அனைத்து வாக்குசாவடி மையங்களிலும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.இன்று நடைபெற்று வரும் ஊரக உள்ளாட்சி தேர்தலில் 174 பதற்றமான வாக்குசாவடி மையங்களில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது. மாநில தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி பதற்றமான வாக்குசாவடி மையங்களில் வெப் கேமரா, வீடியோ கவரேஜ் மற்றும் 48 நுண் பார்வையாளர்கள் மூலம் கண்காணிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. வருவாய்துறை அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள், வாக்குசாவடி மையங்களை கண்காணித்து வருகிறார்கள். மேலும், மண்டல நிலையான அலுவலர்களும் வாக்குசாவடி நிலைகளை பார்வையிட்டு வருகிறார்கள். மாலை 5 மணிக்குள் 70 முதல் 80 சதவிதத்திற்கு மேல் வாக்குப்பதிவு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வாக்குப்பதிவு நிறைவடைந்த பின்பு மண்டல அலுவலர்கள் மூலம் வாக்குபெட்டி மற்றும் இதர பொருட்கள் வாக்கு எண்ணிக்கை மையங்களுக்கு பாதுகாப்பாக எடுத்து சென்று ஸ்ட்ராங் ரூமில் வைக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள அறைகளை கண்காணிக்க வெப் கேமரா, சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில் பூத் சிலிப் கடந்த 3, 4 நாட்களாக வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பூத் சிலிப் கிடைக்காத வாக்காளர்களும் மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவித்துள்ள ஆவணங்களை காண்பித்து வாக்களிக்க அனுமதிக்கப்படுகிறது. மேலும், சட்டம், ஒழுங்கு பிரச்சனைகள் ஏதுமின்றி வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின்போது வட்டாட்சியர்கள் திரு.அழகர் (திருச்செந்தூர்), திரு.செல்வகுமார் (தூத்துக்குடி) மற்றும் மண்டல அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.